மாண்புமிகு திரு. செ. மாதவன்: நம்முடைய அரசு இது போன்ற பொருள்களை வாங்கும்போது ப்ரையாரிடி பேசிஸ்—எப்படி வாங்குவது என்ற விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளின்படி வாங்கப்படுகின்றன.

Assessees under Urban Land Tax Act

* 434 *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Revenue be pleased to state:

(*a*) the total number of Urban Land Tax assessees in Madras City as on date; and

(*b*) the total amount derived through Urban Land Tax?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (மூலச் சட்டம்) சட்டத்தின் கீழ் வரி விதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை—132,724.

1971 ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தின்கீழ் வரி விதிக்கப் பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை—80,549.

1972 ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தின்கீழ் வரி விதிக்கப் பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை—39,663.

(இ) தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் (மூலச் சட்டம்) சட்டத்தின் கீழ் (இதுவரை வசூலிக்கப்பட்ட தொகை)—ரூ. 421 லட்சம்.

1971 ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தின்கீழ் (இதுவரை வசூலிக்கப்பட்ட தொகை)—ரூ. 50.8 லட்சம்.

DR. H. V. HANDE: Sir, is it not a fact that there is a rule that whosoever builds a house and is not using it for rental purposes and he himself occupies, the owner gets a rebate? May I know whether the officers do not grant it normally but allow it only after a lot of claims are made and a lot of correspondence takes place, and may I know whether the Government is prepared to see that orders are passed so that straightaway the rebate is given to persons who own lands and use it for their own purposes?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: Sir, by the Tamil Nadu Urban Land Tax (Amendment) Act, 1972 (Act No. 19 of 1973), the following concessions have been given to the urban land holders:

1973 நவம்பர் 27]

(i) The exemption limit has been raised from one ground to two grounds;

(ii) In the case of persons owning more than two grounds, urban land tax will be levied only on the extent in excess of two grounds at the appropriate rate instead of on the entire extent owned as hitherto;

(iii) The rebate of tax allowed under Section 26 (1) of the Act on lands with buildings occupied by the owners solely for residential purpose has been increased from 25 per cent to 50 per cent;

(iv) The benefit of exemption under Section 29 (k) has been extended to all lands owned by religious, philanthrapic or charitable institutions notified by Government instead of only to those lands used by the philanthrapic institutions as under the earlier provisions.

The Amended Act came into force from 1—7—1972.

அந்தச் சட்டத்திலேயே மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சலுகைகள்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அதிகாரிகள் அறிவுறுத்தப் பட்டிருக்கிருர்கள். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவாரானுல், சம்பந்தப்பட்ட அதிகாரி யிடத்தில் சொல்லப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

Ex-Servicemen colony near Ayanavaram

* 435 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Revenue be pleased to state:

(*a*) whether the Ex-Servicemen residing at Kumaramangalam Colony at Ayyanavaram in Madras have requested during July 1973, for the assignment of the land in which they reside; and

(*b*) if so. the action taken thereon?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) சென்னை, ஜெனரல் குமாரமங்கலம் காலனியில் வாழும் முன்னுள் படைவீரர் அங்கத்தினர் தாங்கள் குடியேறியுள்ள நிலங்களைத் தங்களுக்கு ஒப்படை செய்து தருமாறு கேட்டுள்ள முறையீடுகள் அச்சங்கத் திடமிருந்து பெறப்பட்டுள்ளன.

(இ) இது அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவர் அவர்களே, இந்த முன்னுள் ராணுவ வீரர்கள் குடியிருந்து வருகின்ற இடம் தமிழக அரசுக்குச் சொந்தமானதா அல்லது மத்திய அரசு நிலமா? எப்பொழுது இந்த ஆய்வு முடிந்து அவர்களுக்குப் பட்டா வழங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.